*கவனிக்க.- 2021.07.09 ஆந் திகதிய 2236 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2236 - 2021 ජූලි මස 16 වැනි සිකුරාදා - 2021.07.16

*2236 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 862 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |


**கவனிக்க.**- *(1) நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் 2021 யூலை மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

*(2) நிதி சட்டமூலம் 2021 யூலை மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, ஒகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

861 - B82250 - 5,403(2021/07)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் வருவாய் பரீட்சகர் சேவையின் மூன்றாம் தரத்திற்கான வருவாய் பரீட்சகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021

மத்திய மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படும் வருவாய் பரீட்சகர்கள் III ஆந் தரத்திற்கான வருவாய் பரீட்சகர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிவாய்ந்த மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் கொண்ட ஆண்/பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பரீட்சை - பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழு சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும். இந்தப் பரீட்சை கண்டியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

01. நியமிக்கப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி உள்ளூராட்சி ஆணையாளரால் தீர்மானிக்கப்படும்.

**02. சேவை நிபந்தனைகள் :**

i. மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருவாய் பரீட்சகர் சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான நிபந்தனைகளுக்கும் பதவி உயர்வு செய்வதற்கான நிபந்தனைகளுக்கும், அதே நிபந்தனைகளுடன் தொடர்பான திருத்தங்கள் அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்கள் என்பவற்றுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் வருவாய்ப் பரீட்சகர்கள் சேவையின் III ஆந் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள் ;

ii. இந்தப் பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத்துடன் கூடியது ;

iii. நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு இந்த சேவையில் தகுதியான நபர்கள் நியமிக்கப்படுவார்கள் ;

iv. தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவிக்கான தகுதிகளை நிரூபிக்க தவறினால் குறித்த நபரின் பதவி நிறுத்தப்படும்.

v. 18/2020 இலக்கமிட்ட அரசாங்க நிர்வாக சுற்றுநிரூப விதிகளின் படி இப்பதவியில் நியமிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ மொழிக்கு மேலதிகமாக சேவையில் சேர்ந்த 03 ஆண்டுகளுக்குள் மற்றைய உத்தியோகபூர்வ மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்படும் அரசாங்க மொழித்தேர்ச்சி பாடநெறியில் தமக்குரிய திறன் மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (பெற வேண்டிய திறன் மட்டம் 03). இவ்வாறு தகுதி பெறும் வரை சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.

vi. தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் மத்திய மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் சேவை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சேவையாற்ற வேண்டும் என்பதுடன் மூன்று ஆண்டு தகுதிகாண் காலம் முடியும் வரை அவர்கள் முன்வைக்கும் இடமாற்றத்திற்கான எந்தவொரு கோரிக்கையும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

vii. இந்த நியமனம் அவ்வப்போது வெளியிடப்படும் தாபனக் கோவை விதிமுறைகள், மத்திய மாகாண நிதி விதிமுறைகள், மாகாண சபை நிதி விதிகள், திணைக்களத்தினால் வெளியிடப்படும் நிபந்தனைகள் மற்றும் அரசாங்க மற்றும் மத்திய மாகாண சபையால் வெளியிடப்படும் விதிமுறைகளுக்கும் உட்பட்டது.

viii. வெளிக்கள கடமையில் ஈடுபடும் போது பதவிக்குரிய சீருடையை அணிய வேண்டும்.

ix. திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் பரிந்துரைத்தால் பயணத்திற்கு மோட்டார் சைக்கிளை பயன்படுத்த வேண்டும். திணைக்களத் தலைவர்/நிறுவனத்தின் தலைவர் பரிந்துரைத்தால் திருவிழாக்கள் போன்ற சிறப்பு சந்தர்ப்பங்களில் வருவாயைச் சேகரிக்க/மேற்பார்வையிட இரவு நேரத்திலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

***03. சம்பள அளவுத்திட்டம்*** : - வருமான பரீட்சகர் சேவையின் மூன்றாம் வகுப்புக்கான ஒருங்கிணைத்த சம்பள அளவு, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன்படி மாதாந்தம் ரூ. 27,140.00 - 10X300 - 11X350 - 10X495 - 10X660- ரூ. 45,540.00 ஆகும்.

***04. தகுதிகள்*** :

1. அடிப்படைத் தகுதிகள் -

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) 31.07.2021 அன்று வயது 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மிகையாமலும் இருக்க வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர பதவியில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது ;

(இ) சிறந்த குணமும் நல்ல ஆரோக்கியமும் கொண்டவராக இருக்க வேண்டும் ;

(ஈ) எந்தவொரு மதத்தினதும் குருமார் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் ;

(உ) விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவர்களாக இருக்க வேண்டும். (விண்ணப்பக் கடைசி திகதியன்று குறைந்தது 03 ஆண்டுகளாவது நிரந்தர வதிவிடத்தை கொண்டிருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது இது தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.) ;

(ஊ) விண்ணப்பதாரர் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தால் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவராக இருக்கக் கூடாது ;

குறிப்பு - விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதிக்குள் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும் விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். உள்ளூராட்சி ஆணையாளர் கோரியபடி தொடர்புடைய அனைத்து சான்றிதழ்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து மட்டுமே விண்ணப்பிக்கக் கூடாது.

***05. கல்வி மற்றும் பிற தகுதிகள்*** :

திறந்த ஆட்சேர்ப்பு -

i. சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மற்றும்

ii. க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (01) (பொது சாதாரண பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு -

i. சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மற்றும்

ii. மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி சேவையின் முதன்மை சேவை வகைக்கு தொடர்புடைய தொழில்நுட்பமற்ற, அரை தொழில்நுட்பம் அல்லது தொழில்நுட்பம் தரத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயலில், திருப்திகரமான மற்றும் நிரந்தர சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

திருப்திகரமான சேவை காலம் - சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் இயல்பான அளவிலான செயல்திறனைக் காட்டியிருந்தாலும் கூட, எந்தவொரு இடைநீக்கம் அல்லது பணி நீக்கம் அல்லது பணித் தள்ளிப்போடுதல் என்பவற்றிற்கு உட்பட்டிருக்காமல்,

நிர்ணயிக்கப்பட்ட முந்தைய 05 ஆண்டுகளுக்குள் பெறப்பட்ட அனைத்து ஊதிய உயர்வுகளையும் பெற்று எச்சரிக்கை தவிர்ந்த வேறு எந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படாதவராக திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்.

**06. பரீட்சைக் கட்டணம்** : - விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி அல்லது அதற்கு முன்னதாக மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் இந்த பரீட்சைக்கான கட்டணமாக ரூ. 600.00 இனை 20-03- 02-13 என்ற நிதித் தலைப்பிற்கு செலுத்தி உங்கள் பெயரில் பெறப்பட்ட ரசீதின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் பொருத்தமான இடத்தில் ஒட்ட வேண்டும். இந்த பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. (நீங்கள் செலுத்திய கட்டண ரசீதுக்கான நிழற்படப்பிரதியினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.) முத்திரை அல்லது காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

**07. விண்ணப்பிக்கும் முறை** : -

(அ) இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப கடதாசியின் இருபுறமும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவம் A4 அளவு தாளில் தயாரிக்கப்பட வேண்டும், மேலும் விண்ணப்பதாரி அதை தனது சொந்த கையெழுத்தில் தெளிவாக நிரப்ப வேண்டும். முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 02 வரையிலும், இரண்டாவது பக்கத்தில் இலக்கம் 03 முதல் 05. ii வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 05. iii முதல் 10 வரையிலும், நான்காவது பக்கத்தில் 11 முதல் 13 வரையிலும் அமையுமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், முழுமையற்ற தகவலுடன் கூடிய விண்ணப்பம் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

(ஆ) திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலமாக "உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், பல்லேகலை, குண்டசாலை" என்ற முகவரிக்கு 16.08.2021 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வருவாய் பரீட்சகர் தரம் III ஆட்சேர்ப்புக்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021" எனத் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பமும் ஏற்கப்பட மாட்டாது. அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது திணைக்களத் தலைவர்கள்/நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) எல்லா வகையிலும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தபாலில் தொலைதல் அல்லது தாமதத்திற்கு இந்தத் திணைக்களம் பொறுப்பேற்காது, இது தொடர்பாக எந்தவொரு புகாரும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

(ஈ) நீங்கள் திறந்த அடிப்படையிலா அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலா விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(உ) விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டத்தின் குறியீட்டு எண்ணை விண்ணப்ப மாவட்டமாகக் குறிப்பிட வேண்டும்.

கண்டி - 01 மாத்தளை - 02

நுவரெலியா - 03

(ஊ) விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்பதாரின் கையொப்பம் அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள் சமாதான நீதவான், சட்டத்தரணி, பொது நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர், ரூபா 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு ஒருங்கிணைந்த சம்பளத்தினைப் பெறும் மத்திய அல்லது மாகாண அரசாங்க சேவை நிரந்தர பணியாளர் தர அலுவலர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி பதவியை வகிக்கும் அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

குறிப்பு - பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ரசீதைத் தவிர வேறு எந்த ஆவணமும் அல்லது பிரதியும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படக்கூடாது.

**08. பரீட்சைக்கான அனுமதி** :

(அ) விண்ணப்பங்களை முறையாக சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு/பரீட்சை ஆணையாளர் மூலம் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். சான்றளிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தினைச் சமர்ப்பிக்காத பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) ஒரு விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டையினை வழங்குவது ஒருவர் பரீட்சைக்குத் தகுதி பெற்றவர் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதக்கூடாது.

(ஈ) பரீட்சையினை நடத்துவது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு/பரீட்சை ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும். பரீட்சாத்திகள் அந்த விதிகளை மீறினால், அவர்கள் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு/பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உட்படுவர்.

**09. பரீட்சாத்திகளின் அடையாளம் :**

பரீட்சாத்திகள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தின் தலைவர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ஆ) குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**10. தவறான தகவல்களை வழங்குதல் :**

ஒரு பரீட்சாத்தி தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன்பாகவோ அல்லது அதற்குப் பின்னரோ அல்லது எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படலாம். பரீட்சாத்தி முன்வைத்த ஏதேனும் விடயங்கள் அவர் தெரிந்தே தவறாகச் சமர்ப்பித்திருப்பது தெரியவந்தால் அல்லது அவர் எந்தவொரு முக்கியமான விடயத்தையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**11. பரீட்சை முறை மற்றும் பாடத்திட்டம் :**

i. திறந்த போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் -

பின்வரும் பாடங்களுக்கு நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை அடிப்படையில் நேர்காணல் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

| பொருள் | பாடத்திட்டம் | நேரம் (மணி நேரம்) | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| மொழித் திறன் | இந்த வினாத்தாளில் பரீட்சார்த்தியின் வெளிப்பாடு, புரிதல், எழுத்தறிவு மற்றும் எளிய இலக்கண பயன்பாடு குறித்த அறிவை சோதிக்கும் பொருள் தொடர்பான வினாக்கள் இடம்பெறும். | 1 1/2 | 100 புள்ளிகள் |
| பொது உளச்சார்பு | இந்த வினாத்தாளில் பரீட்சார்த்தியின் எண்திறன்கள், தர்க்க அறிவு, பொது அறிவு மற்றும் பலவற்றை அளவிடும் பொருள் தொடர்பான வினாக்கள் இடம்பெறும். | 01 | 100 புள்ளிகள் |

ii. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் -

பின்வரும் பாடங்களுக்கு நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை அடிப்படையில் நேர்காணல் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

| பொருள் | பாடத்திட்டம் | நேரம் (மணி நேரம்) | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| பொது உளச்சார்பு | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான அறிவு, பகுப்பாய்வு செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் அவர்களின் திறனை அளவிடுவதற்கும் விரைவான மற்றும் துல்லியமான தீர்மானங்களை எடுப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும். | 1 1/2 | 100 புள்ளிகள் |
| பொது அறிவு | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முக்கியத்துவம் வாய்ந்த தற்போதைய நிகழ்வுகள் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவை அளவிட தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகும். | 01 | 100 புள்ளிகள் |

ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் தேவையான புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீத (40%) புள்ளிகளையும், பரீட்சையில் தேர்ச்சி பெற மொத்த பரீட்சையில் சராசரியாக குறைந்தது ஐம்பது வீத (50%) புள்ளிகளையும் பெறும் பரீட்சார்த்திகளிடமிருந்து பெறப்பட்ட புள்ளிகள் வரிசை அடிப்படையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இரு மடங்கு பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையின் பின்னர் பிறகு அறிவிக்கப்பட்ட திகதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சை பரீட்சார்த்திகளின் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதற்காக மட்டுமேயன்றி இதன்போது புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

12. நியமனம் செய்வதற்கான தேர்வு முறை -

தற்போதுள்ள வெற்றிடங்களில் எழுபது சதவீதம் (70%) திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலும், முப்பது சதவீதம் (30%) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலும் நிரப்பப்படும். போட்டிப் பரீட்சை முடிவுகளில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஒரு நேர்முகப் பரீட்சை மூலம் தகுதி உறுதி செய்யப்பட்ட பின்னர் அரசாங்க நிபந்தனைகள் மற்றும் ஆட்சேர்ப்புக்கான விதிகளின் படி வெற்றிடங்கள் நிரப்பப்படும். இறுதிப் புள்ளிகளுக்குச் சமமான பல பரீசாத்திகள் இருக்கும் போது உயர் கல்வித் தகைமை மற்றும் கள அனுபவம் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர். பொது நிர்வாக சுற்றறிக்கை 15/90 இன் விதிகளின்படி மாவட்ட மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. 10. (ஆ) பந்தியின் படி தகுதியான பரீட்சார்த்திகளின் பெயர்களைக் கொண்ட பெறுபேறு பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு/பரீட்சைகள் ஆணையாளர் ஊடாக தபால் மூலம் அல்லது மத்திய மாகாணத்தின் அதிகாரபூர்வ வலைத்தளம் (www.psc.cp.gov.lk) மூலம் அறிவிக்கப்படும்.

14. மேற்கண்ட விதிமுறைகளில் உள்ளடங்காத விடயங்களில் எழும் பிரச்சினைகள் குறித்து மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தீர்மானமே இறுதியானது.

15. இந்த அறிவித்தலின் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள அறிவித்தலின் உள்ளடக்கத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

எச். எம். எம். யூ. பி. ஹேரத்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண சபை கட்டடத் தொகுதி,
பல்லேகலை,
குண்டசாலை,
2021, யூலை 07.

(அலுவலக உபயோகத்திற்கு)

**மத்திய மாகாண பொது சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் வருமான பரீட்சகர் சேவையின் மூன்றாம் வகுப்புக்கான வருமான பரீட்சகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான (திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை - 2021**

விண்ணப்பிக்கும் மாவட்டம் மற்றும் குறியீட்டு இல :

விண்ணப்பிப்பது மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த (வரையறுக்கப்பட்ட - L திறந்த - O)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதவும்)

01. i. முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதா. PERERA A. B. C.) : ...............................................................................................

...............................................................................................

ii. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................

...............................................................................................

iii. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ...............................................................................................

...............................................................................................

02. i. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........................................

...............................................................................................

ii. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ...............................................................................................

...............................................................................................

iii. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...............................................................................

...............................................................................................

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர் தமது அலுவலக முகவரியினைக் குறிப்பிட வேண்டும்.)

iv. நிரந்தர வதிவிட மாவட்டம் : ...............................................................................................

v. பிரதேச செயலகம் பிரிவு : ...............................................................................................

vi. மத்திய மாகாணத்தில் வசிப்பது எப்போதிலிருந்து : ...............................................................................

03. i. பாலினம் (ஆண் - M, பெண் - F) : ☐ (உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதவும்)

ii. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

iii. விவாக நிலை : (விவாகமானவர் - M, விவாகமாகாதவர் - S) | |
(உரிய எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

iv. தொலைபேசி எண் : ........................................................

v. பிறந்த திகதி : ஆண்டு : ........................ மாதம் : ........................ திகதி : ........................

vi. 2021.07.31 இற்கு வயது :

வருடங்கள் : ............... மாதங்கள் : ............... நாட்கள் : ...............

04. இனம் : ................................................

05. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

i. க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு : - ........................

சுட்டிலக்கம் : ........................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

ii. க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு: ........................

சுட்டிலக்கம் : ........................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

iii. பெறப்பட்ட பட்டம்/டிப்ளோமா பற்றிய விபரங்கள்

| பட்டம்/டிப்ளோமா | பல்கலைக்கழகம்/நிறுவனம் | பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |

06. பிற கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகள் : ..............................................................................

..............................................................................................................................

07. i. நீங்கள் எப்போதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா? ஆம், இல்லை:

..............................................................................................................................

ii. “ஆம்” எனில் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும் : ..............................................................

..............................................................................................................................

08. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிந்தால்

i. தற்போது பதவி : ..............................................................................

ii. தற்போதைய தரம் : ..............................................................................

iii. சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? நிரந்தரம் என்றால் திகதி : ..................................................

..............................................................................................................................

iv. பணியிட பெயர் மற்றும் முகவரி : ..............................................................................

..............................................................................................................................

v. பணி இடத்தின் தொலைபேசி இல. : ..............................................................................

09. விண்ணப்ப முடிவடையும் திகதிக்கு திருப்திகரமாக 05 ஆண்டுகள் சேவை காலத்தினை நிறைவு செய்துள்ளீரா?

.....................................................

அவ்வாறாயின்,

| ஆண்டு | செயல்திறன் நிலை | சம்பள உயர்வு பெறப்பட்டது/இல்லை/ தாமதமானது |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

10. i. பரீட்சை கட்டண இரசீது இலக்கம் மற்றும் திகதி : ..........................................................................................

ii. இரசீது பெறப்பட்ட பிரதேச செயலகம் : ..........................................................................................

| |
|---|
| இரசீதினைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும். |

11. விண்ணப்பதாரர் பற்றிய சான்றிதழ் :

இங்கு கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவும் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையானவை என்று நான் அறிவிக்கிறேன். அரசாங்க விதிகள் மற்றும் இந்த ஆட்சேர்ப்பு மீதான நிபந்தனைகளுக்கு இணங்க நான் விருப்பம் தெரிவிக்கிறேன். என் விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் வழங்கியிருப்பது பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் தெரிய வந்தால் எனது பரீட்சை பெறுபேறு இரத்து செய்யப்படும் என்பதையும் பதவியின் பின்னர் அவ்வாறு தெரியவரின் நான் பதவி விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...........................

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி .....................................................என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் ............................. ஆந் திகதி கையொப்பமிட்டார் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள இரசீது இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.............................................
உறுதிப்படுத்தியவரின் கையொப்பம்

பெயர் : .....................................................

பதவி : .....................................................

திகதி : .....................................................
(முத்திரையை இடவும்)

(தற்போது அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே கீழே உள்ளது பொருந்தும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

13. இந்த விண்ணப்பத்தினை விண்ணப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி. ....................................................... ........................................................................................................................... என்பவர் ................................................... .......................................................................என்ற பதவியில் .................................................. திகதியில் இருந்து ...........................................திகதி வரை ........................................................................................................................... இல் சேவை புரிகிறார் என்பதையும் அவரது தனிப்பட்ட கோப்பு/சேவை பதிவுகள் பிரகாரம் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் சான்றளிக்கிறேன். தற்போது அவரது பணிகள் திருப்தி அளிப்பவை என்பதுடன் கடந்த 05 ஆண்டு காலத்தினுள் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார் என்பதனால் மத்திய மாகாண வருவாய் பரீட்சகர் பதவிக்கு அவர் பொருத்தமானவர் என்றும் அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் நான் சான்றளிக்கிறேன்.

....................................................
திணைக்களத்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

பெயர் : ....................................................

பதவி : ....................................................

திகதி : ....................................................

07 - 406

---

**மத்திய மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்பு சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2, 223 மற்றும் 2021.04.09 ஆந் திகதியிட்ட வர்த்தமானியின் IV (அ) பந்தியில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்பு சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அறிவித்தலின் 08 (II) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரலுக்கான இறுதித் திகதி 2021.05.10 இலிருந்து 2021.07.30 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

எச். எம். எம். யூ. பி. ஹேரத்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

2021, ஏப்பிறல் 27.

07 - 364

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.